| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.ராஜேந்திரன்<br>த/பெ.திரு.கோபால் | அ.வ.எண். 234/2015 | 23.07.2026 |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

15) சங்கிலி மூப்பன், கருப்பன் மூப்பன், மருதை மூப்பன் ஆகியோருக்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் சங்கிலி மூப்பனுக்கு பாப்பாத்தி, மஞ்சுளா, தமயந்தி ஆகியோரும், கருப்பன் மூப்பனுக்கு ஜோதி, அங்குப்பொன்னு ஆகியோரும், மருதை மூப்பனுக்கு காமராஜ் மட்டும் வாரிசு. மேற்படி சங்கிலி மூப்பன், கருப்பன் மூப்பன், மருதை மூப்பன் ஆகியோர் எப்போது இறந்தனர் என்றால் தேதி தெரியாது. சுமாராக மேற்படியார்கள் இறந்து எவ்வளவு காலம் இருக்கும் என்றால் சங்கிலி மூப்பன் இறந்து சுமார் 4 வருடமும், கருப்பன் மூப்பன் இறந்து சுமார் 3 வருடமும், மருதை மூப்பன் இறந்து சுமார் 2 வருடமும் இருக்கும்.

16) மேற்படியார்கள் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது உயிருடன் இருந்தனரா என்றால் இல்லை. அப்படியானால் மேற்படியார்கள் சுமார் 4 வருடத்திற்கு முன்பு இறந்தனர் என்பது வழக்கு தாக்கல் செய்ததிலிருந்தா அல்லது தற்போதிலிருந்தா என்றால் வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து சுமார் 4 வருடத்திற்கு முன்பு இறந்தனர். மேற்படியார்களின் இறப்பு, வாரிசு சான்றிதழ்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதனை இதுவரையில் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

17) மேற்படி சங்கிலி மூப்பன், கருப்பன் மூப்பன், மருதை மூப்பன் ஆகியோரின் வகையறாக்களிடமிருந்து புல எண்.53/61ல் கண்ட சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது

மனைவி பாப்பாத்திக்கு மேற்படி சங்கிலி மூப்பன், கருப்பன் மூப்பன், மருதை மூப்பன் ஆகியோர் மேற்படி புல எண்ணை பொறுத்து ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தி கொடுத்துள்ளனரா என்றால் இல்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தின் கிரையதாரர் பெயரிலோ, அவரது பெயரிலோ மேற்படி சொத்திற்கான பட்டா உள்ளதா என்றால் உள்ளது.

18) யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் மூவர் பெயரிலும் உள்ளது. எப்போது பட்டா ஏற்பட்டது என்றால் 2010 ல் நான் பட்டாவிற்காக விண்ணப்பித்து, ஜாமாபந்தியில் மேற்படி மூவர் பெயரிலும் பட்டா ஏற்பட்டது. எந்த வருடம் என்றால் வருடம் தெரியாது, வீட்டில் எழுதி வைத்துள்ளேன். மேற்படி பட்டாவிற்கு விண்ணப்பித்தது யார் என்றால் நான்தான். மேற்படி இடத்தை மேற்படி மூவரோ, அவர்களது வாரிசுகளோ அனுபவித்தற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது.

19) என்ன ஆவணம் உள்ளது என்றால் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சொத்தை கிரைய அடிப்படையில் மேற்படி மூவரோ, அவர்களது வாரிசுகளோ அனுபவிக்கவில்லை என்றாலும், ஆனார் அனுபவித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

20) வா.சா.ஆ.5 பட்டாவில் மேற்படி மூவர் பெயரோ, அவர்களது வாரிசுகளின் பெயரோ உள்ளதா என்றால் இல்லை, தனிப்பட்டா பெற்றுவிட்டேன். மேற்படி தனிப்பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எவ்வித தனிப்பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றாலும், ஆனால் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் பட்டாவில் கண்ட பட்டாதாரர்கள் பெயரே நத்தம் நில வரி அடங்கல் பதிவேட்டில் வா.சா.ஆ.11 அடங்களிலும் கண்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி மூவருக்கும் தனிப்பட்டா கொடுக்கப்பட்டுவிட்டது. வா.சா.ஆ.5, வா.சா.ஆ.11 ஏற்பட்ட காலத்தில் தனிப்பட்டா எதுவும் மேற்படி மூவருக்கும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.